## கலென்பிந்துனுவெவ பிரதேச சபை - 2023

------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்து / உரிமை மாற்றங்களிலான கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்கள் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்.எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக கால வரையறைகளினுள் மற்றும் பொருத்தமான சட்ட விதிகளிற்கிணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு அறிவித்தல் பலகை வருமான பில்லிடல் ரூபா 126,500 ஆன போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 63,350 ஆக குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | வருமானங்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | இயந்திர வாடகை வருமான பில்லிடல் ரூபா 200,975 ஆன போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 220,795 ஆக கூட்டி காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 2022 ஆண்டில் சுவீகரித்த 02 சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டிற்காக பெறுமானத் தேய்வு | ஏற்றுக் கொள்வதென. | பெறுமானத் தேய்வு கொள்கைக்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 36,682 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | தேய்மானம் கணக்கீடு செய்யயப்பட வேண்டும் |
| (ஈ) | நிலையான வைப்பு கணக்கொன்றிற்கு உரியதாக மீளாய்வாண்டிற்காக ரூபா 44,897 ஆன பெறவேண்டிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சரியாக பெறுமதிகளை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | இறுதி திகதியின் பின்னர் கொள்வனவு செய்த சொத்துக்களிற்குரிய பெறுமானத் தேய்வு ரூபா 51,579 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பெறுமானத் தேய்வை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி ஊழியர் சம்பளம் மற்றும் ஊதிய மீள்நிரப்பு பெறுமதி விரிவான வருமான கூற்றின் பிரகாரம் ரூபா 18,414,108 ஆன போதும் உள்ளூராட்சி திணைக்கள மீள்நிரப்பு பத்திரத்தின் பிரகாரம் அது ரூபா 19,195,165 ஆனதில் ரூபா 781,057 ஆன வித்தியாசமானது. | ஏற்றுக் கொள்வதென. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கைகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதி 04 வருமான விடயங்களிற்குரியதாக விரிவான வருமான கூற்றில் காண்பித்திருந்த பெறுமதி மற்றும் அதற்குரிய அட்டவணையில் காண்பித்துள்ள பெறுமதிக்கிடையில் ரூபா 214,348 ஆன வித்தியாசமானது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| விடயம் | தொகை | இணங்காத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நீர் குழாய் இருப்பு | 3,452,403 | இவ்விருப்பினுள் இருக்காத 03 வகை பண்டங்களின் பெறுமதிகளை அகற்றாது இந்த இருப்பு பெறுமதியை காண்பித்தல் | ஏற்றுக் கொள்வதென | உறுதிப்படுத்தல் களை சமர்ப்பிக்க வேண்டும் |
| நடைபாதை | 232,400 | நடைபாதை சந்தை பதிவேடு | மேற்படி | மேற்படி |
| வாராந்த சந்தை கட்டணம் | 3,400,300 | வாராந்த சந்தை கட்டண பதிவேடு | மேற்படி | மேற்படி |

| | | | | |
|---|---|---|---|---|
| சூரிய குழாய் நீர் வருமானம் | 94,974 | வருடாந்த வருமான பதிவேடு | மேற்படி | மேற்படி |
| களியாட்ட வரி சினிமா | 147,500 | களியாட்ட வரி அறவீட்டு பதிவேடு | மேற்படி | மேற்படி |
| நானாவித வைப்பு | 20,000 | விபரம் உள்ளடங்கிய பதிவேடு | மேற்படி | மேற்படி |
| ஒப்பந்த வைப்பு | 17,789 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| வாராந்த சந்தை வாகன தரிப்பு வருமானம் | 105,000 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| ஏனைய வைப்பு | 1,654,506 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| நீர் வழங்கல் கடன்கொடுனர் | 479,194 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| செலுத்தாத ஓய்வூதியம் | 689,653 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| முத்திரை | 558,128 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| கிடைத்த மூலதன செலவு மானியம் | 8,233,389 | மேற்படி | மேற்படி | மேற்படி |
| ஆதன பொறி மற்றும் உபகரண கொள்வனவு | 5,089,500 | மேற்படி | மேற்படி | மேற்படி |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1958 இன் 29 இலக்க கால்நடை கட்டளை சட்டம் --------------------------- | | | |
| (i) 2(2)பிரிவு | சபை அதிகார பிரதேசத்தின் தேவைபாட்டிற்கு மாத்திரம் மாட்டிறைச்சி வழங்க கரகொலவெவ தனியார் இடமொன்றில் நடாத்திச் செல்லும் மாடறுப்பு தொட்டியிற்கு சபை அனுமதி வழங்கியிருந்த போதும் இரண்டு பொலிஸ் அலுவலர்களின் முழு பாதுகாப்புடன் அங்கு மாடுகள், 12 வயதிற்கு குறைந்த கன்றுகள் மற்றும் எருதுகள் அறுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | சபை அதிகார பிரதேசத்தின் மாட்டிறைச்சி தேவைபாட்டிற்கு மாத்திரம் மாடறுப்பு தொட்டிலின் நடவடிக்கை இடம்பெறுவதாக சபையின் செயலாளரினால் பொறுப்பேற்க வேண்டும். |
| (ii) 2(2)பிரிவு | குரகொலவெவ மாட்டறுப்பு தொட்டியில் இறைச்சி பரீட்சிக்கும் பொது சுகாதார பரிசோதகரினால் சமர்ப்பித்திருந்த 30 மாடுகள் அறுக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்த போதும் 30 எருதுகள் அறுக்கப்பட்டிருந்தன. | மேற்படி | கால்நடை கட்டளை சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 9,439,884 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 25,424,762 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | வருமான வகை | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2023 பில்லிட்ட வருமானம் | 2023 சேகரித்த வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பில்லிட்ட வருமானம் | 2022 சேகரித்த வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 2,656,827 | 2,644,393 | 2,574,711 | 5,533,458 | 2,656,827 | 2,702,644 | 2,922,213 | 5,463,776 |
| (ii) | வாடகை | 10,142,350 | 6,057,105 | 6,346,250 | 1,440,660 | 10,142,350 | 6,471,310 | 5,473,490 | 1,729,805 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணம் | 820,000 | 1,074,080 | 1,042,080 | 408,500 | 820,000 | 779,250 | 576,500 | 376,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 17,494,300 | 18,446,883 | 14,676,128 | 7,939,952 | 17,494,300 | 10,233,633 | 14,477,380 | 4,169,197 |
| | | 31,113,477 | 28,222,461 | 24,639,169 | 15,322,570 | 31,113,477 | 20,186,837 | 23,449,583 | 11,739,278 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி மற்றும் வரி** | | |
| (i) மீளாய்வாண்டு வீதவரி பில்லிடல் ரூபா 1,863,099 ஆன போதும் அதன் 50 சதவீதமான ரூபா 929,720 இனை அறவிட்டிருக்காததுடன் 2023 சனவரி 01 திகதி நிலவிய ரூபா 5,107,976 ஆன நிலுவை வீதவரியிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 823,934 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதென. | அறவிட செயற்பட வேண்டும். |
| (ii) 2023 திசெம்பர் 31 திகதியளவில் நிலுவை வியாபார வரி ரூபா 412,200 அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| **(ஆ) வாடகை** | | |
| (i) சபைக்கு சொந்தமான 32 கடையறைகளிற்காக 18 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடையறை வாடகை ரூபா 367,010 தொகை ஆண்டு 1 இற்கும் 15 இற்கும் இடையிலான காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ii) சபைக்கு சொந்தமான இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதற்காக 07 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | 421,850 தொகை 02 ஆண்டுகலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | சபைக்கு சொந்தமான 05 சொத்துக்களை குத்தகை வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 651,800 தொகை 02 ஆண்டுகலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | அறவிட செயற்பட வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திர கட்டணம்** | | |
| | 2021 முதல் 2023 ஆண்டு வரையான காலத்திற்காக 47 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 408,500 ஆன அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்** | | |
| | நீர் பாவனையாளர் 417 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை நீர் கட்டணம் ரூபா 109,232 தொகை மற்றும் நீர் தொடர்புக் கட்டணம் ரூபா 140,172 தொகை 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைத்துள்ள கடமைகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை சட்டத்தின் 3 பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் பொது பாதைகள் மீதான நடவடிக்கைகளை முறையாக்கல் மற்றும் கட்டுப்படுத்தல், பொது மக்களின் நலன்கள், வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் முக்கிய 30 விடயங்களை மேற்கொள்ள துணைச் சட்டம் விதிக்க இயலுமாகவிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரையும் அந்த விடயங்களிற்காக துணைச் சட்டம் விதித்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதென. | துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலென்பிந்துனுவெவ நூலகத்திற்கு சொந்தமான பெறுமதி ரூபா 14,341 ஆன 51 புத்தகங்கள் காணாமல் போயிருந்த | அந்த புத்தகங்களில் 03 கிடைத்துள்ளதாக மற்றும் எஞ்சிய புத்தகங்களின் | நட்டத்தை அறவிட |

| | | |
|---|---|---|
| போதும் அதற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதியை அலுவலர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாராந்த சந்தை வளவில் 10 பழைய கடையறைகளை திருத்தி கவர்ச்சியான தோற்றத்துடன் தயாரிக்க தேவையான நடவடிக்கை எடுக்காத காரணத்தால விளைவற்று காணப்பட்டன. | இக் கடையறைகளை LDSP கருத்திட்ட நிதியத்தால் திருத்துவதற்காக முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென | திருத்தி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாடறுப்பு கொட்டிலிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்றை மத்திய சுற்றாடல் அதிகார சபை வழங்கியிருந்த போதும் அந்த அனுமதிப்பத்திரதில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளிற்கு முரணாக அறுக்கப்படும் மிருகங்களின் இரத்தத்துடனான நீர் தலை மற்றும் எஞ்சிய பகுதிகள் திறந்த வெளிக்கு நேரடியாக வெளியிடப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்வதென. | அனுமதிப்பத்திர நிபந்தனைகளிற்கு இணங்க நடவடிக்கை இடம்பெறுவதாக சபையின் செயலாளர் பொறுப்பேற்க வேண்டும். |